**தலைப்பு 160 – சுற்றாடல் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுற்றாடல் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றாடல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் முகாமைத்துவ சேவையின் உத்தயோகத்தர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பாக ரூபா 260,361 தொகையொன்று அறவிட வேண்டி இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாத கட்டுநிதி நிதியாக அந்த தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஒக்டோபர் 08 ஆம் திகதிய ஒழுக்காற்று கட்டளையின் பிரகாரம் உத்தியோகத்தரினால் அரசாங்கத்திற்கு நிதி மோசடி ஒன்று மேற்கொள்ளப்பட்டமை தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த ஒழுக்காற்று கட்டளையில் குறிப்பிடப்பட்டட தண்டனை உத்தியோகத்தரின் 03 சம்பள அதிகரிப்பை பிற்போடுவது மாத்திரமாக இருந்தது. அந்த ஒழுக்காற்று கட்டளை மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமான ரூபா 260,361 தொகையை அரசாங்கத்திற்கு அறவிடுவதற்கோ அல்லது | முற்பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தரினால் அரசாங்கத்திற்கு செலுத்துவதற்காகவே கட்டளை வழங்கப்பட்டிருக்கவில்லை. அறவிடல் தொடர்பான ஆலோசனை ஒழுக்காற்று உத்தியோகத்தரிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. | |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 891(i) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த | அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டத்தை நடாத்துதல் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் அமைச்சின் செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டம், பதவிநிலை உத்தியோகத்தர்களின் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டம் என்பன நடாத்தப்படுவதுடன் அந்த ஒவ்வொரு கூட்டத்தன் போதும் உள்ளக கட்டுப்பாடுகள் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதா என கலந்துரையாடப்படுகின்றது. இந்த ஒவ்வொரு நடவடிக்கைகளும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்யளப்டுகின்றது. கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாடு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் சரியான பிரகாரம் அமுல்படுத்தப்படுகின்றமையை கணக்காய்விற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருள் அகற்றும் வசதிகளை கட்டியெழுப்பும் செயற்திட்டம் மற்றும் பாதசாரிகள் சங்கமிக்கும் நிலப்பிரதேசங்களில் உயிரியல் பல்வகைப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் முறைமை சேவைகளை பராமரிக்கும் செயற்திட்டம் (ESCAMP) இற்காக முறையே ஒதுக்கப்பட்ட ரூபா 2,478,373 தொகை மற்றும் ரூபா 5,880,165 தொகை என்பன பயன்படுத்தப்படாமல் திரைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | கழிவுப்பொருள் அகற்றும் செயற்திட்டத்தின் இறுதி பட்டியலை தீர்ப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெறாமை மற்றும் செயற்திட்டத்திதை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட பல்வேறு கஷ்டங்களின் காரணமாக பணிகளை பூர்திசெய்வதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக நிதி ஏற்பாட்டை மீண்டும் திரைசேரிக்கு அனுப்ப வேண்டி ஏற்பட்டிருந்தது. | திரைசேரியில் இருந்து கிடைக்கின்ற பணத்தை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிஏற்பாடு சேமிப்புக்களின் மொத்த பெறுமதி ரூபா 105,445,677 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 86,690,909 தொகை அதாவது 82.21 சதவீதமும் மூலதன நிதி ஏற்பாட்டின் சேமிப்பாகும். இரண்டு மூலதன செலவின விடயங்களின் நிதி ஏற்பாடு நூற்றுக்கு நூறு சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 06 செலவின விடயங்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சில் அமைந்துள்ள “சொபாதம் பியஸ” கட்டிடத்தில் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிஏற்படும் என பாதீடு தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டில் அவ்வாறான தேதையொன்று ஏற்படாமை மற்றும் 2019 ஆம் ஆண்டில் அரச செலவின முகாமைத்துவத்தின் கீழ் பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 04/2019, 07/2019 இன் மூலம் புதிய கொள்வனவுகள் வரையறுக்கப்பட்டமை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை மாற்றமடையாமையின் காரணமாக மேற்கூறப்பட்ட செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டடிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் மீளாய்வின் மூலம் தேவைகளை இனங்கண்டு நிதி ஏற்பாட்டை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104(1)(அ) | இழப்பு நட்டம் ஏற்பட்டவுடன் அதன் அளவு மற்றும் காரணத்தை குறிப்பாக அறிந்து கொள்வதற்கு பொறுப்புவாய்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டி இருந்த போதிலும் 2020 நவம்பர் 16 ஆம் திகதி ஏற்பட்ட வானக விபத்துக்குரியதாக கணக்காய்வு திகதியான 2021 ஏப்ரல் 05 ஆம் திகதி வரையிலும் நட்டம் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. | PF 9438 ஆம் இலக்க கெப்வண்டி திடீர் விபத்துக்கு உட்பட்டமையினால் கெப்வண்டி பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டதுடன் பழுதுபார்ப்பதற்கு செலவாகின்ற தொகையை தீர்மானித்து கொள்வதற்காக மற்றும் கெப்வண்டியின் காப்புறுதி மூலம் அந்த செலவினங்களை மேவுகை செய்யப்படுகின்றதா என அந்த நிறுவனத்தில் இருந்து விசாரிக்கப்பட்டுள்ளது . தற்போது உரிய விபத்துக்காக பொறுப்புவாய்ந்த சகல தரப்பினரிடமும் விசாரணை செய்யப்பட்டு முடிவடைந்திருந்ததுடன் அந்த நிறுவனத்தில் இருந்து | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பதில் கிடைத்ததன் பின்னர் பரிசோதனை அறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 104(4) அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கும் அதன் பிரகாரம் நட்டத்தை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(1)(4) | இழப்பு ஏற்பட்ட திகதி முதல் 03 மாதங்களுக்குள் பூரண அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஏப்ரல் 05 ஆம் திகதி வரையிலும் அமைச்சுக்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | NB 2752 ஆம் இலக்க வேன்வண்டி விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று ஆரம்ப பரிசோதனை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 31 ஆம் திகதிய 2/2017 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2018 யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்தின் சகல நிறுவனங்களினாலும் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்கு சொந்தமான சகல வாகனங்களும் அந்த நிறுவனங்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், வெளி நிறுவனங்களுக்குரிய 03 வாகனங்கள் அமைச்சின் பெயரில் கையேற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான வாகனம் மற்றும் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்குரிய வாகனங்களை கையேற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. உத்தியோகபூர்வ வாகனமாக எடுத்துச் செல்லப்பட்ட மோட்டார் வாகனத்தின் உரித்தை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | நிறுவனத்திற்கு கண்டறிவதற்கு முடியாதிருந்தது. அதன் உரிமையாளரைக் கண்டறிந்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது பரிச்சயமான காநிலை மாற்ற நகர செயற்திட்டத்திற்காக பொருத்தமான பரிச்சயமான நகரத்தை தெரிவு செய்யும் போது சுற்றாடல் அமைச்சினால் 2011 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட காலநிலை மாற்றங்களுக்கான அபாய தரவு புத்தகம் (climate Change vulnerability data book) பயன்படுத்தப்பட்டதுடன், உள்ளடக்கப்பட்ட தரவுகள் 08 வருடங்களுக்கு மேற்பட்ட பழையதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மிகவும் பொருத்தமான பரிச்சயமான நகரத்தை தெரிவு செய்யும் போது நாளதுவரையாக்கப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் மூலம் தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டதுடன், பொருந்தும் தன்மை (Adaptation) மற்றும் இடரைக் குறைத்தல் (Mitigation) செயற்திட்டம் என 02 கட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சு 2020 யூலை மாதம் ஒரு வருட காலத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | செயற்திட்டங்களில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நாளது வரையாக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்ட வேண்டியிருந்ததுடன், குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

## 3.2 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒலி மாசுபடுதலை கட்டுப்படுத்துதல் தொடர்பாக தற்போது காணப்படுகின்ற பிரமாணங்களை திருத்தி புதிய பிரமாணங்களை அறிமுகப்படுத்துவதற்கும், பலவித ஒலியோசைகளை வெளிவிடும் வாகனங்களை இந்த நாட்டிற்கு கொண்டுவருவதை தடை செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் 2021 யூன் வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய தரப்பினருடன் சில கூட்டங்கள் சுற்றாடல் அமைச்சில் நடத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சுற்றாடல் அதிகாரை சபையினால் உரிய பிரமாணங்களை திருத்துவதற்கும் அமுல்படுத்துவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு கையளிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டது. மேலும். தற்போது சுற்றாடல் அதிகார சபையினால் உரிய பிரமாணங்கள் திருத்தப்படுகின்றது. | புதிய பிரமாணங்களை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காலநிலை மாற்றங்கள் மூலம் இந்நாட்டிற்கு ஏற்படுவதற்குள்ள பாதகமான தாக்கங்களை குறைப்பதற்காக காலநிலை மாற்ற அச்சுறுத்தல்களுக்கு ஒத்துப்போகும் தேசிய திட்டம் 2016 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்துவதற்கும், அதற்கான நிதியத்தை வழங்குவதற்கும் தேசிய ஒத்திசைவு நிதியம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும் | திட்டமிட்ட காலம் 04 வருடங்களை விஞ்சியிருந்தமையினால் தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதிப்பை ஏற்படுத்தும் ஆக்கிரமிக்கும் தாவரங்கள் மற்றும் விஷேட உயிரினங்களை இந்த நாட்டிக்கு கொண்டுவருவதை தடுத்தல் மற்றும் அந்த தாவரங்கள் மற்றும் விலங்குகளை அழிப்பதற்காக புதிய சட்டமொன்றின் வரைபைச் செய்யும் முன்மொழிவு 2009 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த முன்மொழிவு 2009 சனவரி 22 ஆம் திகதிய அமப/09/0047/359/001 ஆம் இலக்கத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகரித்திருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் புதிய சட்டமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆக்கிரமிக்கும் தாவரங்கள் மற்றும் விஷேட விலங்குகளை இந்நாட்டிற்கு கொண்டுவருவதைத் தடுத்தல் மற்றும் அந்த மரங்கள் மற்றும் விஷேட விலங்குகளை அழிப்பதற்குரியதான எதிர்ப்பு உயிரினங்களின் பல்வகை தொடர்பான சட்ட வரைவு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் திருத்தத்துடன் இறுதி வரைவு சட்ட வரைவு திணைக்களத்திற்கு 2019 நவம்பர் 08 ஆம் திகதிய 02/08/GAR 122 இலக்க கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தை ஸ்தாபித்து அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாமல் கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொரிய பொருளாதார அபிவிருத்தி புரிந்துணர்வு நிதிய கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கழிவுப் பொருள் அகற்றும் வசதிகள் செயற்திட்டத்திற்காக கணக்காய்வு திகதி வரையிலும் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 466 மில்லியன் ஆக இருந்ததுடன், அந்த செயற்திட்டம் 2020 ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் | இந்த செயற்திட்டம் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது நிறுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தில் ரூபா 460 மில்லியன் செலவினம் திட்டமிடல் தயாரித்தல், பெறுகை நடவடிக்கைகள், உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கான | இந்த உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி அமுல்படுத்தக்கூடிய மாற்று தேவைகளை இனங்கண்டு அமுல்படுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| வெற்றியளிக்காமையின் காரணமாக இடைநடுவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகள், உத்தேச செயற்திட்ட நிலத்தை தயாரித்தல் மற்றும் செயற்திட்ட பதவியணியினருக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் போன்றவையினால் ஏற்பட்டதாகும். தயாரிக்கப்பட்ட திட்டம் பெறுகையிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் செயற்திட்ட நிலத்தை தயாரிப்பதற்காக ஏற்பட்ட செலவினங்கள் சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்படவில்லை. |

### 3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தாய்ப்பாலில் உடலிற்கு பாதகமான “dioxin – like” (DL) அளவு அடங்கியிருந்ததா என பரீட்சிப்பதற்காக 2019 ஆகஸ்ட் 07 ஆம் திகதி மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினாலும், பேராதனை பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளரினாலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 1,000,000 தொகையொன்று செலவிடுவதற்கு இணங்கியிருந்த போதும், 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி வரையில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 600,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்து. | செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திட்ட சந்தர்ப்பத்தின் போது செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 300,000 (உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் 30 சதவீதம்) மற்றும் இரண்டாவது கொடுப்பனவிற்காக உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உரித்தான தொகையான ரூபா 300,000 ஆக ரூபா 600,000 செலுத்தப்பட்டதுடன், உடன்படிக்கைக்குரிய ஏனைய செயற்பாடுகள் இது வரையிலும் நிறைவேற்றப்படாதிருந்தமையினால் அந்த நடவடிக்கைகள் முடியும் வரை மிகுதி பணத்தை கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. | செலவிடப்பட்ட தொகையின் செயலாற்றல் பரீட்சிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 45 (xv) ஆம் பிரிவு மற்றும் 34(3) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்காக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் துணை வேந்தரினால் மாத்திரம் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தும், அந்த நியதிகளுக்கு இணங்காத வகையில் இந்த செயற்திட்டம் தொடர்பான உடன்படிக்கையில் சுற்றாடல் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளரால் கையொப்பம் இடப்பட்டிருந்தது. | இந்த பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் பேராதனை பல்கலைக்கழத்தின் சுற்றாடல் கற்கைகள் நிலையத்தினால் நேரடியாக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையாக இருந்தமையால் அந்த நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்து. அந்த உடன்படிக்கைக்காக சட்ட உத்தியோகத்தரின் அங்கீகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அங்கீகாரம் மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்தல் சட்ட ரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற 15 ஆவது செயற்குழு கூட்டத்தின் தீர்மானத்தின் படி (Steering Committee) தாய்ப்பால் மாதிரி ஒட்டு நிறுவனங்களில் (Welding plait) சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரின் குடும்பங்களில் இருந்து பெறப்படுவதுடன், முதல் பிள்ளை பிறந்து இரண்டு வாரங்களுக்குள் பெறப்பட்ட தாய்ப்பால் மாதிரி பயன்படுத்த வேண்டியிருந்தது. மேலும் 2020 மார்ச் வரையிலும் தெரிவாக பெறப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்ட போதிலும், 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 உலகலாவிய இடர் நிலைமையின் காரணமாக ஜேர்மனியில் கட்டளையிடப்பட்ட பொருட்கள் குறித்த பிரகாரம் கிடைக்காமையினால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதமாகி இருந்ததாக பேராதனை பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் கற்கைகள் நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அந்த உபகரணங்கள் இன்மையின் காரணமாக தாய்ப்பால் மாதிரிகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. தற்போது உபகரணங்கள் கிடைத்திருந்த போதும் ஆரம்பத்தில் | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது அதன் செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் அதனை நடைமுறை ரீதியில் அமுல்படுத்தும் இயலுமை காலரீதியில் பின்தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட தாய்மார்களின் மாதிரிகளை பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை காணப்படவில்லை. புதிய மாதிரிகள் பெறவேண்டிய தாய்மார்கள் இனங்காணப்பட வேண்டி உள்ளது. இந்த இடர் நிலைமையின் கீழ் தாய்மார்களை இனங்காணுதல், இதற்கு வைத்தியசாலைகளில் இருந்த மாதிரிகளை பெற்றுக்கொள்வதற்கான செய்பாடுகள் சீரற்ற நிலைமையில் காணப்படுகின்றமையினால் இதுவரை நிறைவேற்ற முடியாதிருந்தது. | |
| (ஈ) | தாய்ப்பால் மாதிரிகளை சேகரிக்கும் திட்டம், நாட்டில் சகல பரிதேசங்களையும் மேவுகை செய்யும் வகையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களின் மாதிரிகளை பெற்றுக் கொள்ளல், தெரிவுகளை தயாரித்தல், பரீட்சிப்பதற்காக மாதிரிகளை சீனாவிற்கு அனுப்புதல் பேராதனை பல்கலைக்கழத்தினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சந்தர்ப்பம் முதல் அமுல்படுத்தப்பட வேண்டும். இதன் பிரகாரம் 2020 யூன் 30 ஆம் திகதி வரையில் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் 2020 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தின் காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உபகரணங்களை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை மற்றும் மாதிரிகளை இனங்காணல் மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை மற்றும் காணப்படுகின்ற கொவிட் 19 நிலைமையின் அடிப்படையில் அதற்காக சுகாதார பிரிவில் இருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுதல் வசதியீனமாக இருந்தமை என்பவற்றினால் அந்த செயற்பாடுகள் தாமதமடைந்திருந்தன. இந்த மாதிரிகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக சீனாவிற்கு அனுப்ப வேண்டியிருந்தது. | அமுல்படுத்துவதற்கு உள்ள இயலுமையை மீண்டும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். |

## 3.6 வெளிநாட்டு செயற்திட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலநிலை மாற்றங்களை குறைக்கும் கூட்டுச் செயற்திட்டத்தினால் 2020 திசெம்பர் 29 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட் 55 கணனிகளில் 38 கணனிகள் திட்டமிடப்பட்ட நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும், மிகுதி 17 கணனிகள் செயற்திட்டத்திலேயே வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட கணனிக்காக தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பு காணப்படாமையின் காரணமாக 55 கணனிகளும் பயனற்ற நிலையில் காணப்பட்டது. | மிகவும் விரைவாக பகிர்ந்தளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | வளங்களை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றலும் 12.45 சதவீதம் ஆன கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமை இதற்கு தாக்கமளித்த பிரதான காரணமாகும். | செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சின் களஞ்சியத்தில் இடவசதிகள் போதியளவில் இல்லாதிருந்தமை 2019 ஆம் ஆண்டின் போதும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் போதும் அந்த குறைபாடுகள் அவ்வாறே காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | தற்போது இந்த அமைச்சில் களஞ்சியத்திற்கு மேலதிகமாக இடவசதிகளை கண்டறிதல் வசதியீனதாக இருந்தது. எனினும் எதிர்காலத்தில் அமைச்சின் பிரிவுகள் மாற்றப்படுமிடத்து இதற்காக தேவையான மேலதிக இட வசதிகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) கணனி மற்றும் துணைப்பாகங்களில் 63 விடயங்கள் மற்றும் 03 பெக்ஸ் இயந்திரங்கள் மிகையாக காணப்படுகின்றமை இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுகளில் அமைச்சின் நிலையன சொத்து பதிவேடு தயாரிக்கப்பட்ட போதிலும், கணனி துணைப்பாகங்களின் தொடர் இலக்கம் (Serial Numbers) உள்ளடக்கப்பட்டு நிலையான சொத்து பதிவேடு, பொருட்பதிவேட்டு புத்தகத்துடன் இணக்கம் செய்யப்பட்டு நாளதுவரையாக்கும் போது இந்த விடயத்தில் மிகையாக இனங்காணப்பட்டுள்ளது. அந்த விடயங்களையும் பொருட் பதிவேடுகளுக்கு கொண்டுவருவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. | சொத்துப் பதிவேட்டை சரியான பிரகாரம் நாளதுவரையாக்கி மிகைச் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் எண்ணிக்கை 258 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 229 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடமான எண்ணிக்கை 29 ஆகும். சிரேஷ்ட நிலையில் 18 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது 62 சதவீதமாக இருந்ததன் காரணமாக அந்த அமைச்சின் செயலாற்றலுக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இலங்கை விவசாய சேவையில் அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகள் மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மின்சாரம், நீர் மற்றும் கட்டிடம் போன்ற பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. அபிவிருத்தி உத்தியோகத்தரில் மிகை ஊழியர் எண்ணிக்கை 05 ஆகும். | ஒவ்வொரு சேவைகளுக்கும் உரிய அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இலங்கை விவசாய சேவையின் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு அமைச்சிற்கு விண்ணப்பிக்கப்படவில்லை. சுற்றாடல் அமைச்சின் முன்னைய பதவியணியினரில் உள்ளடங்காத மற்றும் தற்போதைய தேவையொன்று காணப்படாத விவசாய சேவையினதும், பொறியியல் சேவையினதும் பதவிகளுக்காக அங்கீகாரத்தைத் திருத்தித் தருமாறு கோரப்பட்டுள்ளது. இந்த அமைச்சிற்காக 391 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தேவை காணப்பட்டது. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்) மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (நீர் மற்றும் கட்டிடம்) போன்ற பதவிகளுக்காக எதிர்காலத்தில் சகல அரசாங்க நிறுவனங்களுக்காகவும் நடாத்தப்படுகின்ற பொது போட்டிப் பரீட்சையில் சேர்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அத்தியவசிய பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை சேர்த்துக்கொள்ளல் மற்றும் பதவியணியினரை திருத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |